இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 9 | இதழ் : 36 | நவம்பர் | 2023 | Vol.: 9 | Issue: 36 | November | 2023

பல்துறை - பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் | இருமொழி | காலாண்டிதழ்
Multi - Disciplinary International E-Journal for Tamil Studies | Bi-Lingual | Quarterly

க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான தொழில்சார் வழிகாட்டலின் வினைத்திறனின்மையானது, அவர்களின் எதிர்கால செயற்பாடுகளில் ஏற்படுத்தும் தாக்கம் The Impact on the G.C.E A/L students due to lack of guidance on professional skills

இராசையா தேவேந்திரன் | Rassaiah Devendran

ஆசிரியர், மமா/வ/அருணோதயா இந்து கல்லூரி, குருந்தோயா, கந்தபளை, இலங்கை. Teacher, Cp/W/Arunodhaya Hindu College, Kurundhoya, Kandapola, Sri Lanka.

DOI: 10.5281/zenodo.10222558

ஆய்வுச் சுருக்கம்

"க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான தொழில்சார் வழிகாட்டலின் வினைத்திறனின்மையானது, அவர்களின் எதிர்காலச் செயல்பாடுகளில் ஏற்படுத்தும் தாக்கம்" என்ற பொருண்மையில் வலப்பனை கல்வி வலய தமிழ்மொழி மூல 1AB, 1C பாடசாலைகளை மையமாகக் கொண்டு ஆய்வு முன்னெடுக்கப்படுகிறது. க.பொ.த. உயர்தரக் கல்வி நிறைவின் பின்னர், கல்வியைத் தொடந்து செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. இதனால் பல மாணவர்களின் தொழில் வாழ்க்கை கேள்விக்குறியாகிறது. மாணவர்களின் உயர்தரக் கல்வியின் பின்னரான தொழில் வாழ்க்கையானது, மாணவர்களின் இரண்டாம் நிலைக் கல்வியிலேயே தங்கியுள்ளது.

ஆய்வுத் தலைப்பின் அருஞ்சொற்களாகிய வினைத்திறனின்மை, தொழில்சார் வழிகாட்டல், மாணவர்களின் எதிர்காலச் செயல்பாடுகள், க.பொ.த. உயர்தர மாணவர்கள் போன்றவற்றின் பல்வேறு தேடல்களின் தொகுப்பான இலக்கிய மீளாய்வு ஆய்வுக்கு வலுச் சேர்க்கின்றது.

ஆய்வுக்காக வலப்பனை கல்வி வலயத்தின் நான்கு தமிழ்மொழி மூல க.பொ.த. உயர்தர பாடசாலைகளும் தெரிவுசெய்யப்படுகின்றன. ஆய்வுப் பிரச்சினையை உறுதிப்படுத்தும் தரவுத் தேடல்களுக்காக நோக்க மாதிரிகளின் அடிப்படையில் பாடசாலைகள், தரம் 12, தரம் 13 வகுப்புக்கள் மற்றும் அதிபர்கள், தொழில் வழிகாட்டல் ஆலோசகர்கள் ஆகியோர் நோக்க மாதிரி அடிப்படையில் தெரிவுசெய்யப் படுகின்றனர். மாணவர் தெரிவானது, 662 மாணவர்களுள் 150 மாணவர்கள் இலகு எழுமாற்று மாதிரிகளாக தெரிவுசெய்யப் படுகின்றனர். அதில் கல்வி கற்கும் 323 மாணவர்களிலிருந்து 50 மாணவர்களும் விடுகைப்பெற்ற 339 மாணவர்களிலிருந்து 100 மாணவர்களும் தெரிவு செய்யப்படுகின்றனர். இம்மாணவர் தெரிவானது க.பொ.த உயர்தரக் கல்வியை நிறைவு செய்த மாணவர்களில் 50 மாணவர்களும், க.பொ.த உயர்தரக் கல்வியை நிறைவு செய்த மாணவர்களில் 50 மாணவர்களும் உள்ளடங்களாக 100 மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

மாதிரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் அளவுசார் மற்றும் பண்புசார் முறைகளில் பொருத்தமான மென்பொருள் முறைமைகளினூடாக

பகுப்பாய்வு, கலந்துரையாடல் போன்ற செயற்பாடுகளுக்குள் உள்வாங்கப்படுகின்றன. பகுப்பாய்வினூடாக பல்வேறு முடிவுகளைக் கண்டறிய முடிகின்றது. பாடசாலை மட்டங்களில் தொழில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் மந்தகரமான இயக்கம், மாணவர் விருப்பங்களுக்கு முக்கியத்துவம் வழங்காமை, திருப்தியற்ற மாணவர் ஒத்துழைப்புகள், தொழில் வழிகாட்டலில் புதிய விடயங்களை உள்வாங்காமை, பகுதிநேர தொழில் வழிகாட்டல் செயற்பாடுகள் இடம்பெறாமை, மாணவர்கள் தாம் கற்கும் காலங்களில் தொழில்சார் தகைமைகளை வளர்ப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படாமை, நிபுணத்துவமிக்க மனித வளங்களை தொழில் வழிகாட்டலில் எதிர்பார்க்கின்றமை போன்ற முடிவுகளைக் கண்டறிய முடிகிறது. இதனைத் தொடர்ந்து, பாடசாலை மட்டங்களில் வினைத்திறனான தொழில் வழிகாட்டல் முன்னெடுப்புகளுக்கான விதந்துரைப்புகளும் எடுத்தியம்பப்படுகி ன்றன.

Abstract

The study is focused on the theme "The Impact on G.C.E A/L Students due to the Lack of Guidance on Professional Skills," specifically examining Tamil medium 1AB and 1C schools in the Walapana Education Zone. The low number of students pursuing education beyond the G.C.E Advanced Level is a concern, potentially affecting the professional lives of many students. The professional trajectories of these students post-higher education hinge on the quality of their secondary education. A comprehensive literature review on topics such as unemployment, career guidance, future activities of students, and higher education further fortifies the research.

To address the research issue, four Tamil medium G.C.E Advanced Level high schools in the Walapane education zone are selected for the study. Data collection involves purposive sampling of schools, grade 12 and grade 13 classes, principals, and career guidance counsellors. Out of 662 students, 150 are selected for the study, including 50 from a pool of 323 current students and 100 from a pool of 339 former students who have completed G.C.E Advanced Level education. Quantitative and qualitative methods are employed to analyze, interpret, and discuss the collected data through appropriate software systems.

The analysis may reveal insights into the slow implementation of career guidance counselling services at school levels, a lack of emphasis on student preferences, suboptimal student collaborations, inadequate incorporation of new issues in career guidance, a dearth of part-time career guidance activities, limited opportunities for students to develop professional skills during their learning, and an expectation for professional human resources in career guidance. Subsequently, recommendations are proposed for enhancing effective career guidance initiatives at the school level.

திறவுச்சொற்கள் (Keywords): க.பொ.த, உயர்தர மாணவர், தொழில்சார், வினைத்திறன், தாக்கம்.

இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 9 | இதழ் : 36 | நவம்பர் | 2023 | Vol.: 9 | Issue: 36 | November | 2023

பல்துறை - பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் | இருமொழி | காலாண்டிதழ்
Multi - Disciplinary International E-Journal for Tamil Studies | Bi-Lingual | Quarterly

அறிமுகம்

"கைத்தொழில் உலகிற்கு மாணவர்களை ஆயத்தப்படுத்துவதும் அதனுடன் தொடர்புடைய ஒரு மனப்பான்மையை ஏற்படுத்துவதுமாகும்" என்ற தேசிய இலக்கினை எய்தும் நோக்குடன் மாணவர் சமூகம் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பதுடன் வழிகாட்டப்படல் வேண்டும் என்பதனையும் வெகுவாக எதிர்பார்க்கும் வகையில் இவ் ஆய்வு முன்னெடுக்கப்படுகிறது. இன்றைய காலத்தில் மாணவர்கள் மூன்றாம் நிலைக் கல்வியை அடைவது மட்டுமே தேசிய இலக்கு என்ற எண்ணத்துடன் சில பாடசாலைகள் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றன. சில காரணங்களால் உயர்கல்வி தகுதியை இழக்கும் மாணவர்களுக்குப் பொருத்தமான தொழில் தெரிவுக்கான வழிகாட்டல் வழங்கப்படுவதில்லை.

ஒவ்வொரு பாடசாலையும் மாணவர்களின் அதீத திறமைகளை மட்டுமே கவனத்தில் கொள்வதுடன், தேசிய பாடசாலைகள் தமது மதிப்பீட்டுப் பெறுபேறுகளை உயர்த்திக்கொள்ள மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகளிலேயே கவனம் செலுத்துகின்றன. இன்றைய நடைமுறைகளில் உளவியல் அறிந்த ஆசிரியர்கள் உள்வாங்கப் பட்டாலும் மாணவர்களுக்கு பொருத்தமான தொழிலுக்குரிய வழிகாட்டல் வழங்கப்படுவதில்லை. அனைத்து மாணவர்களும் கல்விக் கலையை இலகுவில் பெற்றுவிட முடியாது. ஆனால் ஒவ்வொரு மாணவனும் ஏதோ ஒரு வகையில் தொழிற்கலையை தன்னுள் கொண்டிருப்பான் என்பது திண்ணம்.

1C பாடசாலைகளும் மேற்கூறிய இயல்புகளை அப்படியே பின்பற்றுகின்றன. பாடசாலை என்பது சமூகத் தேவைகளை பூர்த்தி செய்வதாய் அமைய வேண்டும். மாணவர்களை சகல தொழிற்துறைகளிலும் திறமையானவர்களாக உள்வாங்குவதே இலக்கு என்பதை பாடசாலையின் குறிக்கோள் மூலமாக எய்த முயற்சிக்க வேண்டும். இருப்பினும் அதிகமான பாடசாலைகளில், மாணவர்கள் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணக்கியல் என உயர்தரக் கல்வியை தெரிவு செய்து கற்கும் வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகிறது. இத்தகைய பாடசாலைகள் பரீட்சை பெறுபேறுகளை முன்னேற்றமடைய செய்யும் வளங்களை மட்டும் கொண்டிருக்கின்றன. ஆனால் தொழில்சார் வழிகாட்டல்களை மாணவர்களுக்கு வழங்கும் வகையிலான வளங்களின்றி இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய பாடசாலைகளில் ஆளணி வளங்கள், பௌதீக வளங்களில் சமநிலையற்ற தன்மைகள் காணப்படுகின்றன. அனைத்து வளங்களையும் கவனத்தில் கொண்டு மாணவர்களை பெற்றார்கள் பாடசாலைகளுக்கு அனுமதிக்க விரும்புவதில்லை. உயர்க்கல்விக்கான தகுதி என்ற ஒற்றை எண்ணத்துடனேயே செயற்படுகின்றனர். பாடசாலைகள் உயர்மட்ட குறிக்கோள்களை கைவிட்டு பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு "பாடசாலைகளுக்குள் முதன்மை" என்ற நிலைப்பாட்டுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன. ஆனால் மாணவர்களை தொழில் உலகிற்கு ஆயத்தப்படுத்த வேண்டும் என்பதனை மறந்து விடுகின்றன என விமர்சனப் பார்வையில் குறிப்பிடப்படுகிறது.

இலக்கிய மீளாய்வு

ஆய்வுத் தலைப்பின் அருஞ்சொற்களாகிய வினைத்திறனின்மை, தொழில்சார் வழிகாட்டல், மாணவர்களின் எதிர்கால செயற்பாடுகள், க.பொ.த உயர்தர மாணவர்கள் என்பனவற்றை உள்வாங்கிய பல்வேறு தேடல்களின் தொகுப்பாக இலக்கிய மீளாய்வு அமைகிறது.

இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 9 | இதழ் : 36 | நவம்பர் | 2023 | Vol.: 9 | Issue: 36 | November | 2023
பல்துறை - பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் | இருமொழி | காலாண்டிதழ்
Multi - Disciplinary International E-Journal for Tamil Studies | Bi-Lingual | Quarterly

இலங்கையில் தொழில் வழிகாட்டல் ஆலோசனை சேவையின் வரலாறு

1960களில் இலங்கையின் கல்வி அமைச்சினால் தொழில் வழிகாட்டல் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தலும், மாணவர்கள் தொடர்பாக திரட்டிய அறிக்கையும் பேணப்பட்டு வந்தது. இத்துறையில் ஆசிரிய ஆலோசகர்கள் தொடர்பான அத்தாட்சிப் பத்திரம் பரீட்சையொன்று பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு தொழில் வழிகாட்டிகள் நியமிக்கப்பட்டார்கள். எனினும் தொழில் வழிகாட்டலுக்காகப் பாடசாலைகளில் கடமை சார்ந்த ஓர் அமைப்பு முறை நிறுவப்பட்டதன் காரணத்தினாலும் பாடசாலைப் பாடத்திட்டத்தினூடாக மாணவர்களை வேலை உலகுக்குத் தயார் செய்தல் தொடர்பாக, கூடிய கவனஞ் செலுத்தப்பட்டதினாலும் எழுபதாம் தசாப்தத்தின் ஆரம்ப காலத்திலேயே இந்தத் தொழில் வழிகாட்டல் சேவை சீர்குலையலாயிற்று.

ஆயினும் இலங்கையின் பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கும் அதே போன்று பாடசாலையை விட்டு வெளியேறுகின்ற பிள்ளைகளுக்கும் பாடசாலை மட்டத்தில் ஒழுங்கு செய்யப்படுகின்ற தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நிறுவுகின்ற தேவை இன்று வரவேற்கப்படுகின்றது. (திறந்த பல்கலைக்கழகம், 2010)

தொழில் வழிகாட்டல் கோட்பாடுகள்

தொழில் வழிகாட்டல் தொடர்பாக பல்வேறு கோட்பாடுகள் கல்வியாளர்களால் உருவாக்கப்பட்டன. அவ்வாறு எழுச்சி கொண்ட வடிவங்களில் சிலவற்றை இங்கு அடையாளம் காட்டலாம். இதன்படி, கின்ஸ்பேர்க்கின் கோட்பாடு, டொனால்ட் சுபரின் கோட்பாடு, ஆன்றௌவின் கோட்பாடு, ஹெலண்டின் கோட்பாடு, றொபேட் கொப் பொக்கின் கோட்பாடு, கிட்டின் கோட்பாடு, சவிக்சின் பின்நவீனத்துவக் கோட்பாடு, மாக்சியக் கோட்பாடு என்பன முக்கியமானவைகளாகும். (ஜெயராசா, 2011)

தொழில்சார் வழிகாட்டலைத் தூண்டும் காரணங்களை அடையாளப்படுத்தல்

இன்றைய காலத்தில் தொழில்சார் வழிகாட்டல் மற்றும் தொழில்சார் கல்வியின் தேவைக்கு பல்வேறு காரணிகள் துணை சேர்க்கின்றன. அதன்படி, பெற்றோர்களால் பிள்ளைகளுக்குத் தொழில் தொடர்பாக அறிவூட்டப்படல், தொழில்கள் சார்பான வரையறுக்கப்பட்ட புலக்காட்சி, கோளமயமாதல், நவீன கைத்தொழில், வர்த்தகத்தின் வளர்ச்சி, அறிவின் விரிவாக்கமும் கற்றவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பும் தொழிற்சந்தையில் ஒவ்வொரு தொழிலுக்குமுள்ள நிரம்பலை அதிகரிக்கச் செய்துள்ளமை, தொழில்கள் பற்றிய அறிவு மாணவர்களுக்குக் கிடைக்கப்பெறாதுள்ளமை, புதிய பாடங்களுக்கும் புதிய தொழில்களுக்குமிடையே உள்ள இணைப்பு மாணவருக்கு அறிவிக்கப்பட வேண்டியுள்ளமை, கூட்டிணைப்புப் பல்கலைக் கழகங்களின் உருவாக்கம் தொழில் துறையிலே புதிய பரிமாணங்களைத் தோற்றுவித்துள்ளமை, தொழில்களுக்கும் கல்விக்குமிடையேயுள்ள தொடர்புகள் விரைந்து மாறி வருகின்றமை, தொழில் செய்துகொண்டே கற்றல், கற்றுக் கொண்டே தொழில் செய்தல் என்ற தோற்றப்பாட்டின் வளர்ச்சி, தொழில்களின் பதிலீடுகள் பற்றிய அறிவு முக்கியத்துவம் பெறதொடங்கியுள்ளமை, உலகெங்கும் நிகழ்ந்த கல்வி விரிவாக்கல் நடவடிக்கைகள், தொழில்களின் வளர்ச்சி போன்ற அம்சங்கள் தொடர் தொழில் வழிகாட்டலை உலகம் முழுவதும் விரிவடையச் செய்கின்றன. (ஜெயராசா, 2011)

பாடசாலைகளில் தொழில்சார் வழிகாட்டல் செயற்பாடுகள்

பாடசாலைகளில் சில விசேட செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் தொழில்சார் வழிகாட்டலை பயனுள்ளதாக்கிக் கொள்ள முடியும். இதன்படி, மாணவர் ஆற்றல்கள், தகைமைகள் போன்றவற்றை பொருத்தமான மதிப்பீடுகள் அவற்றை வளர்ப்பதற்குரிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், தொழில் ஆர்வப் பரீட்சைகளை நடாத்தி மாணவர்களிடமுள்ள தொழில்சார் நாட்டங்களை அறிந்து அதனடிப்படையில் தொழில் வழிகாட்டலை மேற்கொள்ளல், தொழில்சார் அட்டவணைகளை காட்சிப்படுத்தலின் ஊடாக மாணவர்களை தொழிலுக்கு வழிகாட்டுதல், தனியாக, குழுவாக தொழில்சார் வழிகாட்டலை தொடர் தொழில் ஆற்றுப்படுத்தல் செயற்பாடாக துறைசார் வல்லுநர்களை அழைத்து மேற்கொள்ளல், தொழிநுட்ப கல்லூரிகள் மற்றும் பாடசாலைகளை இணைத்துச் செயற்பட வைக்கும் வகையில் திறன்விருத்தி உதவியாளர், மனிதவள அபிவிருத்தி உதவியாளர், தொழிநுட்ப கல்லூரிகளின் "தொழில் வழிகாட்டல் ஆலோசகர்" போன்றோருடன் இணைந்து பாடசாலையின் தொழில்சார் வழிகாட்டல் சேவை செயற்பட வேண்டும். (சிவானந்தன், 2012)

ஆய்வு முறையியல்

"க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான தொழில்சார் வழிகாட்டலின் வினைத்திறனின்மையானது அவர்களின் எதிர்கால செயற்பாடுகளில் ஏற்படுத்தும் தாக்கம்" எனும் ஆய்வு தலைப்பின் ஊடாக வலப்பனை கல்வி வலயத்தின் தமிழ்மொழி மூல க.பொ.த உயர்தர பாடசாலைகளை மாதிரி பாடசாலைகளாக கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. "அளவை நிலை ஆய்வின்" ஊடாக இவ் ஆய்வு முன்னெடுத்து செல்லப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

ஆய்வுச் சிக்கல்

இவ்வாய்வானது "க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான தொழில்சார் வழிகாட்டலின் வினைத்திறனின்மையானது அவர்களின் எதிர்காலச் செயற்பாடுகளில் ஏற்படுத்தும் தாக்கம்" தொடர்பில் ஆய்வு செய்யப்படுகிறது. பாடசாலைகளின் உயர்தரக் கல்வியை பூர்த்தி செய்யும் மாணவர்களில் பெரும்பாலான மாணவர்கள் தமது திறமைக்கு ஏற்ற தொழிற்துறை தெரிவுகளின்றி கேள்விக்குறியான வாழ்க்கையை அனுபவிப்பதனை முதன்மைப்படுத்திய கல்வித் துறையின் ஆய்வுச் சிக்கலாக முன்வைக்கப்படுகிறது.

சிக்கல் கூற்று

"பரீட்சை மையக்கல்வி கலைத்திட்டம், தொழில் வழிகாட்டலுக்கான வளங்களின் பற்றாக்குறை, தொழில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் மந்தகரமான இயக்கம் போன்ற பல்வேறு காரணங்கள் காரணங்கள் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டலின் வினைத்திறனின்மையை உருவாக்கி, அவர்களின் எதிர்கால செயற்பாடுகளில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன."

ஆய்வு நோக்கங்கள்

ஆய்வு பிரச்சினையை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட ஆய்வு தலைப்பினை அடிப்படையாயக் கொண்டு ஆய்வு பொது நோக்கமும், சிறப்பு நோக்கங்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

பொது நோக்கம்

மாணவர்களுக்கான தொழில்சார் வழிகாட்டலின் வினைத்திறனின்மையானது அவர்களின் எதிர்கால செயற்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தினை அறிதல்.

சிறப்பு நோக்கங்கள்

1. பாடசாலைகளில் வினைத்திறனற்ற தொழில்சார் வழிகாட்டல் இடம்பெறுகின்றதா? என்பதனை அறிதல்.
2. பாடசாலைகளின் வினைத்திறனற்ற தொழில்சார் வழிகாட்டலால் மாணவர்களின் எதிர்கால வாழ்க்கை பாதிக்கப்படுவதனை இனங்காணுதல்.
3. தொழில்சார் வழிகாட்டலுக்கும், மாணவர்களுக்கும் இடையிலான தொடர்பு பற்றி அறிதல்.
4. மாணவர்களின் கல்வியறிவு அடைவுமட்டம், இணைபாடவிதான செயற்பாடுகளுக்கு ஏற்ப பொருத்தமான தொழில்சார் வழிகாட்டல் வழங்குதலின் பயன்களை அறிதல்.
5. மாணவர்களுக்கான வினைத்திறனற்ற தொழில்சார் வழிகாட்டலின் பாதகமான விளைவுகளை தவிர்ப்பதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல்.

ஆய்வ வடிவமைப்பு

இவ்வாய்வானது நுவரலியா மாவட்டத்தின் வலப்பனை கல்வி வலயத்திற்குட்பட்ட தமிழ்மொழி மூல பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கல்வி வலயத்தின் 1AB, 1C வகைப் பாடசாலைகள் ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாய்விற்காக ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் ஆய்வு வினாக்கள் உருவாக்கப்பட்டு, இவ்வினாக்களின் அடிப்படையில் ஆய்வுக்கருவிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. வடிவமைக்கப்பட்ட ஆய்வுக்கருவிகளின் மூலம் ஆய்வு மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டோரிடமிருந்து தரவுகள் திரட்டப்பட்டன. திரட்டப்பட்ட தரவுகள் அளவு, பண்பு ரீதியான முறைகளில் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. பெறப்பட்ட பெறுபேறுகளுக்கமைவாக முடிவுகளும், விதந்துரைப்புக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக இவ்வாய்வானது ஐந்து அத்தியாயங்கள் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தவகையில் இவ்வாய்வானது தற்கால, நிகழ்கால உண்மை நிலைகளை ஆராய்ந்து சரியான தகவல்களை அளிக்கும் அளவைநிலை ஆய்வாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

மாதிரித் தெரிவு

ஆய்வுக்காக வலப்பனை கல்வி வலயத்தின் நான்கு தமிழ்மொழி மூல க.பொ.த. உயர்தர பாடசாலைகளும் தெரிவுசெய்யப்படுகின்றன. தேவைக்கருதி இந்நான்கு பாடசாலைகளும் நோக்க மாதிரி அடிப்படையில தெரிவு செய்யப்பட்டுள்ளன. இது போலவே ஆய்வாளனது தேவையின் அடிப்படையில் தரம் 12, தரம் 13 வகுப்புக்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் நான்கு அதிபர்கள், நான்கு தொழில் வழிகாட்டல் ஆலோசகர்கள் ஆகியோர் நோக்க மாதிரி அடிப்படையில் தெரிவுசெய்யப்படுகின்றனர். மாணவர் தெரிவானது, 662 மாணவர்களுள் 150 மாணவர்கள் என்ற அடிப்படையில் ஆய்வாளனால் இலகு எழுமாற்று மாதிரி அடிப்படையில் தெரிவுசெய்யப்படுகின்றனர். அதில் 2015 ஆம் ஆண்டு உயர்தரக் கல்வியை தொடரும் 323 மாணவர்களிலிருந்து 50 மாணவர்களும், விடுகைப்பெற்ற 339 மாணவர்களிலிருந்து 100 மாணவர்களும் தெரிவு செய்யப்படுகின்றனர். க.பொ.த உயர்தரக் கல்வியை நிறைவு செய்த மாணவர் தெரிவானது, க.பொ.த உயர்தரக் கல்வியை நிறைவு செய்த மாணவர்களிலிருந்து 50 மாணவர்களும், க.பொ.த உயர்தரக் கல்வியை நிறைவு செய்த மாணவர்களிலிருந்து 50 மாணவர்களும் உள்ளடங்களாக

மொத்தமாக 100 மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட 150 மாணவர்களே இலகு எழுமாற்று மாதிரி அடிப்படையில் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு வினாக்கொத்துக்களும், அதிபர்கள் மற்றும் வழிகாட்டல் ஆலோசகர்களுக்கு நேர்காணல்களும் மற்றும் ஆவணங்கள் என்ற அடிப்படையில் தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

பகுப்பாய்வு

ஆய்வின் தரவுப்பகுப்பாய்வானது வினாக்கொத்துக்கள், நேர்காணல், ஆவணம் போன்றன மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளினூடாக முன்னெடுக்கப்படுகிறது. மாணவர்களிடமிருந்து வினாக்கொத்து மூலமும் அதிபர்கள் மற்றும் வழிகாட்டல் ஆலோசகர்களிடம் நேர்காணல் முறை மூலமும் தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. தரவுப்பகுப்பாய்வானது, அளவு ரீதியானதும் பண்பு ரீதியானதுமான முறைமைகளில் முன்னெடுக்கப்படுகின்றன. பகுப்பாய்வு தரவு எண் ரீதியானதாக மாற்றப்பட்டு அட்டவணையாக்கம் செய்யப்பட்டு இருபரிமாண, முப்பரிமாண வரிப்படங்கள், சலாகை வரைபுகள், வட்டவரைபுகள் மூலமாக முன்வைக்கப்படுகிறது. பகுப்பாய்வு செயன்முறைக்காக Excel முறைமை பயன்படுத்தி நேர்த்தியான, நம்பகமான பகுப்பாய்வாக அமைகிறது.

பாடசாலைகளின் தொழில்சார் வழிகாட்டல் ஆலோசனை சேவையின் தரமான இயக்கத்தன்மை தொடர்பாக தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. இக்கூற்று தொடர்பாக கல்வி பயிலும் மாணவர்கள் ஏற்கிறேன் என 25.8 சதவீதமானவர்களும், ஓரளவு எற்கிறேன் என 66.15 சதவீதமானவர்களும், ஏற்கவில்லை என 8.05 சதவீதமானவர்களும் குறிப்பிடுவதுடன், விடுகை மாணவர்கள் 12.22 சதவீதமானவர்கள் ஏற்கிறேன் எனவும், 61.88 சதவீதமானவர்கள் ஓரளவு ஏற்கிறேன் எனவும், 26 சதவீதமானவர்கள் ஏற்கவில்லை எனவும் குறிப்பிடும் நிலையில் பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான தொழில்சார் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் செயற்பாடு குறைவாக காணப்படுகிறது என கொள்ளலாம்.

பாடசாலைகளின் தொழில்சார் வழிகாட்டல் பகுதிநேர செயற்பாடுகள் தொடர்பாக தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இக்கூற்று தொடர்பாக கல்வி பயிலும் மாணவர்கள் ஏற்கிறேன் என 4.52 சதவீதமானவர்களும், ஓரளவு எற்கிறேன் என 32.36 சதவீதமானவர்களும், ஏற்கவில்லை என 63.12 வீதமானவர்களும் குறிப்பிடுவதுடன், விடுகை மாணவர்கள் 6.68 சதவீதமானவர்கள் ஏற்கிறேன் எனவும், 23.15 சதவீதமானவர்கள் ஓரளவு ஏற்கிறேன் எனவும், 70..17 சதவீதமானவர்கள் ஏற்கவில்லை எனவும் குறிப்பிடும் நிலையில், பாடசாலைகளில் தொழில்சார் வழிகாட்டல் பகுதிநேர செயற்பாடுகள் குறைவாக காணப்படுகின்றன என கொள்ளலாம்.

பாடசாலைகளின் தொழில்சார் வழிகாட்டலின் ஊடாக தொழில் உலகிற்கு ஏற்ப பாடங்களை தெரிதலும், அதற்கான வழிகாட்டலும் தொடர்பாக தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இக்கூற்று தொடர்பாக கல்வி பயிலும் மாணவர்கள் ஏற்கிறேன் என 48.16 சதவீதமானவர்களும், ஓரளவு எற்கிறேன் என 46.17 சதவீதமானவர்களும், ஏற்கவில்லை என 5.67 சதவீதமானவர்களும் குறிப்பிடுவதுடன், விடுகை மாணவர்கள் 40.32 சதவீதமானவர்கள் ஏற்கிறேன் எனவும், 32.25 சதவீதமானவர்கள் ஓரளவு ஏற்கிறேன் எனவும் 27.43 சதவீதமானவர்கள் ஏற்கவில்லை எனவும் குறிப்பிடும் நிலையில் பாடசாலைகளில் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான தொழில்சார் வழிகாட்டலின் ஊடாக தொழில் உலகிற்கு பாடங்களை தெரிவதற்கான வழிகாட்டல் குறைவாக காணப்படுகிறது என கொள்ள முடியும்.

பாடசாலை காலங்களில் மாணவர்கள் தொழில்சார் தகைமைகளை வளர்த்துக்கொள்ளல் தொடர்பான தரவுகள் பெற்றக்கொள்ளப்பட்டன. இக்கூற்று தொடர்பாக கல்வி பயிலும் மாணவர்கள், விடுகை மாணவர்கள் ஊடாக பெற்றுக்கொள்ளபட்ட தரவுகளின்படி, பாடசாலை காலங்களில் மாணவர்கள் தொழில்சார் தகைமைகளை வளர்த்துக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுகிறது எனலாம்.

பாடசாலைகளில் மாணவர்கள் தொழில்சார் செயற்பாடுகளுக்கு உளவிருப்பத்துடன் ஈடுபடுதல் தொடர்பாக கல்வி பயிலும் மாணவர்கள், விடுகை மாணவர்கள் ஊடாக பெற்றுக்கொள்ளபட்ட தரவுகளின்படி, பாடசாலை காலங்களில் மாணவர்கள் தொழில்சார் செயற்பாடுகளில் உள விருப்பத்துடன் ஈடுபடலானது குறைவாகவே காணப்படுகிறது எனலாம்.

மாணவர்களை பாட ஆசிரியர்கள், தொழில் வழிகாட்டல் ஆலோசகர்கள் இணைந்து தொழிலுக்கு வழிகாட்டுதல் தொடர்பாக தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இக்கூற்றினை கல்வி பயிலும் மாணவர்கள், விடுகை மாணவர்கள் 60 சதவீதத்திற்கும் அதிகமானோர் இல்லை என நிராகரிப்பதன் காரணமாக பாடசாலைகளில் பாட ஆசிரியர்கள், தொழில் வழிகாட்டல் ஆலோசகர்கள் இணைந்து மாணவர்களை தொழிலுக்கு வழிகாட்டுதல் குறைவாக காணப்படுகிறது என கொள்ளலாம்.

மாணவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையில், மாணவர்களின் கல்வியிறிவு, இணைப்பாடவிதான செயற்பாடுகள் என்பனவற்றிற்கேற்ப தொழில் வழிகாட்டல் செயற்பாடானது பாடசாலை மட்டங்களில் குறைவாகவே காணப்படுகிறது என கொள்ளலாம். அத்துடன் கால, சூழல் தேவைக்கேற்ற தொழில் வழிகாட்டல் செயற்பாடும் குறைவாகவே பாடசாலைகளில் காணப்படுகிறது என கொள்ள முடியும்.

கிடைக்கப்பெற்ற தரவுகளின் படி தொழில் வழிகாட்டலில் தொழில் நிபுணத்துமிக்க வழிகாட்டல் ஆலோசகர்களை உள்வாங்க வேண்டும் என 65.93 சதவீதமானவர்கள் கூறுவதுடன், தொழில் வழிகாட்டலில் புதிய விடயங்களை உள்வாங்க வேண்டும் என 78.43 சதவீதமானவர்களும் குறிப்பிடுகின்றனர். இதன்படி பார்க்கும் போது தொழில் தொழில் நிபுணத்துவமிக்க வழிகாட்டல் ஆலோசகர்களை உள்வாங்குதல், புதிய விடயங்களுடன் தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளை முன்னெடுத்தல் என்பன பாடசாலை மட்டங்களில் வெகுவாக எதிர்பாரக்கப்படுகிறது என கொள்ளலாம்.

முடிவுகளும் விதந்துரைப்புக்களும்

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான தொழில்சார் வழிகாட்டலின் வினைத்திறனின்மையானது, அவர்களின் எதிர்கால செயற்பாடுகளில் ஏற்படுத்தும் தாக்கம்" என்ற ஆய்வு தலைப்பினைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஆய்வு வினாக்களின் தரவுப்பகுப்பாய்வின் பெறுபேறுகளைக் கொண்டு, முடிவுகளும் விதப்புரைகளும் எடுத்தியம்பப்படுகின்றன.

முடிவுகள்

1. க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான தொழில்சார் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் செயற்பாடானது ஓரளவாகவே காணப்படுகிறது.
2. பகுதிநேர செயற்பாடுகளின் ஊடாக தொழில்சார் வழிகாட்டல் செயற்பாடுகள் முன்னெடுத்தல் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.
3. க.பொ.த உயர்தர மாணவர்கள் தொழில் உலகிற்கு ஏற்ப பாடங்களை தெரிவு செய்தலும், அதற்கான வழிகாட்டலும் ஓரளவாகவே காணப்படுகிறது.

4. மாணவர்கள் தொழிலுக்காக பாடசாலை காலங்களில் தமது தகைமைகளை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் ஒரளவாகவே காணப்படுகிறது.
5. பாடசாலைகளின் தொழில்சார் வழிகாட்டல் செயற்பாடுகளில் மாணவர்கள் உள விருப்பங்களுடன் ஈடுபடும் தன்மையானது சராசரியாகவே காணப்படுகிறது.
6. பாட ஆசிரியர்கள், வழிகாட்டல் ஆலோசகர்கள் இணைந்து மாணவர்களை தொழிலுக்கு வழிகாட்டுதல் செயற்பாடானது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.
7. மாணவர்களின் கல்வியறிவு, இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு ஏற்ப தொழில் தெரிவுக்கான வழிகாட்டலானது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.
8. காலத்தினதும், சூழலினதும் தேவைக்கேற்ப ஏற்ப பொருத்தமான தொழில்களுக்கு மாணவர்களை வழிகாட்டுதல் செயற்பாடானது குறைவாகவே காணப்படுகிறது.
9. தொழில் வழிகாட்டலில் நிபுணத்துவம் கொண்ட வழிகாட்டல் ஆலோசகர்களை உள்வாங்குவதற்கு அதிகமாக விரும்புகின்றனர்.
10. க.பொ.த உயர்தர மாணவர்கள் தொழில் வழிகாட்டலில் புதிய விடயங்களை உள்வாங்குவதனை விரும்புகின்றனர்.

விதந்துரைப்புக்கள்

தேசிய, மாகாண, வலய மட்ட உதவிகளுடன் சிறப்புத் தகைமைகளை கொண்ட தொழில் வழிகாட்டல் ஆலோசகர்களை உள்வாங்கி, சிறந்த மேற்பார்வைகளுடன் வினைத்திறனான தொழில் வழிகாட்டல் ஆலோசனைக் குழுவை பாடசாலை மட்டங்களில் தாபித்தல்.

காலை மற்றும் மாலை நேரங்களிலும், வாராந்த, தவணை விடுமுறை நாட்களிலும் மாணவர்களை தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளில் உள்வாங்குதல். இதற்காக நாளாந்த, வாராந்த, மாதாந்த, வருடாந்த தொழில் வழிகாட்டல் நேர ஒதுக்கீட்டு திட்டங்களுடன் தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளை முன்னெடுத்தல் சிறப்பாக அமையும்.

வலப்பனை கல்வி வலயத்தின் தமிழ்மொழி மூல உயர்தர பாடசாலைகளானது, தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டு தொழிலுலகிற்கேற்ப பாடங்களை கற்பதற்கும், தொழில்கள் தொடர்பில் அறிந்து கொள்வதற்கும் வளங்களைப் பெற்றுக் கொடுக்கப்படல் வேண்டும். புதிதாக வரக்கூடிய தொழில்கள் தொடர்பாக பத்திரிகைகள், இணையத்தளங்கள், சஞ்சிகைகள், அறிவித்தல் பலகைகள், சுவரொட்டிகள், நிறுவன அறிவிப்புகள் போன்ற வளங்களினூடாக மாணவர்களுக்கு தொழில்கள் தொடர்பில் தெளிவுபடுத்தல்.

பாடசாலை காலங்களில் மாணவர்கள் தமது தொழில்சார் தகைமைகளை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். பாடசாலை காலங்களில் தொழில் நிறுவனங்களில் விசேட சலுகைகளுடன் கற்கைநெறிகளை தொடர்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தி கொடுக்கப்பட வேண்டும். அரச, தனியார் தொழில் நிறுவன உதவிகளுடன் பாடசாலை காலங்களில் மாணவர்கள் NVQ 4,5,6 என நிறைவு செய்து தேசிய தொழிற் தகைமை பட்டங்களை பெறுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

தொழில் வழிகாட்டல்களில் மாணவர்கள் உள விருப்பங்களுடன் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மாணவர்கள் தொழில்சார் எண்ணப்பாடுகளை முன்வைப்பதற்கான வாய்ப்புக்களை வழங்குவதுடன், தொழில்சார் உள்ளடக்கங்களை மாணவர்கள் விரும்பும் வகையில் முன்வைக்க முனைய வேண்டும்.

மனித வளங்களான அதிபர்கள், ஆசிரியர்கள், வழிகாட்டல் ஆலோசகர்கள், மாணவர்கள் இணைந்த ஒரு சுற்றுவட்ட செயன்முறையில் தொழில் வழிகாட்டல் செயன்முறை

வினைத்திறனான இடைத்தொடர்புகளின் ஊடாக பாடசாலை மட்டங்களில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மாணவர்களின் கல்வியறிவு, இணைப்பாடவிதான செயற்பாடுகள் என்பனவற்றைக் கவனத்தில் கொண்டு விசேட வேலைத் திட்டங்களினூடாக தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளை முன்னெடுத்தல். மாணவர் தொழில்சார் திறன்களை தனித்தனியே அணுகி மாணவர்களின கல்வியறிவு – தொழில் தொடர்பு, விசேட தகைமைகள் - தொழில் தொடர்பு, இணைப்பாடவிதான செயற்பாடுகள் - தொழில் தொடர்பு என்ற கட்டமைப்பில் மாணவர்களை தொழிலுக்காக வழிநடத்தப்பட வேண்டும்.

காலநிலை, சூழல், பிரதேச தேவைகளுக்கேற்ப பொருத்தமான தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளை க.பொ.த உயர்தர மாணவர்களின் மத்தியில் முன்னெடுத்தல்.

தொழில் வழிகாட்டல்களில் தொழில்சார் நிபுணத்துவமிக்க வழிகாட்டல் ஆலோசகர்களை உள்வாங்குதல். பட்டதாரிகளையொத்த, குறித்த தொழில் தொடர்பில் 3 – 5 அல்லது 5 – 10 வருட அனுபவம் கொண்ட தொழில் வழிகாட்டல் ஆலோசகர்களை உள்வாங்கி மாணவர்களை தொழிலுக்காக வழிகாட்டுதல். தொழில் ரீதியாக புத்தாக்க நுட்பங்களை கொண்ட வழிகாட்டல் ஆலோசகர்களை உள்வாங்குதல் சிறப்பாக அமையும்.

பொருத்தமானதும், சிறந்ததுமான வளங்களினூடாக தொழில்களுடன் தொடர்புடைய புதிய விடயங்களை உள்வாங்கி மாணவர்களை தொழிலுக்காக வழிகாட்டுதல். மாவட்டத்தில் காணப்படும் முக்கிய தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர்கள் தொழில்சார் புதிய விடயங்களை கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்தல்.

மேற்கண்டவாறு வலப்பனை கல்வி வலய தமிழ்மொழி மூல உயர்தர பாடசாலைகளில் ஆய்வு முடிவுகளுக்காக முன்வைக்கப்பட்ட விதந்துரைப்புக்களை பின்பற்ற முனையும்போது மாணவர்களின் தொழில்சார் பாதகமான எதிர்கால தாக்க செயற்பாடுகளைக் குறைத்துக் கொள்ள முடியும் என ஆய்வாளரால் கருத்துரு முன்வைக்கப்படுகிறது.

துணைநின்றவை

1. அருள்மொழி,செ.(2008). கல்வி ஆய்வு முறைகள், ராஜா புத்தக இல்லம், மட்டக்களப்பு இலங்கை.
2. கணபதி,க.(1993). கல்வி மனவியல் துணைகள், சங்கர் பிரிண்டர்ஸ், சென்னை 600042.
3. சந்தானம்,எஸ். உம் கணபதி,வி.(2002). கல்விசார் அறைகூவல்கள், சாந்தா பப்ளிசர்ஸ், சென்னை.
4. சந்திரசேகரன்,சோ.(2008). சமகாலக் கல்வி முறைகளின் சில பரிமாணங்கள், சேமமடு பதிப்பகம், யாழ்ப்பாணம், இலங்கை.
5. சந்திரசேகரன்,சோ.(2004). கல்வி – ஒரு பன்முகநோக்கு, உமா பதிப்பகம், மட்டக்களப்பு, இலங்கை.
6. சிவானந்தன்,ப.(2011). பாடசாலை தொழில்சார் வழிகாட்டல் – ஆசிரியம், சி.பி.சி பிரஷ, கொழும்பு, இலங்கை.
7. சின்னத்தம்பி,மா.(2008). பாடசாலையும் சமூகமும், குமரன் புத்தக இல்லம். கொழும்பு, இலங்கை.
8. சின்னத்தம்பி,மா.(2007). கல்வியின் பொருளியல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, இலங்கை.

9. சிவநடேஸ்,செ.(2006). பாடசாலை அபிவிருத்தி, கல்விச்சங்கம், கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு இலங்கை.
10. சின்னத்தம்பி,மா.(2005). இலங்கையின் கல்விச்செலவு, விஸ்டம் பப்ளிகேசன்ஸ், மட்டக்களப்பு இலங்கை.
11. வல்வை ஆனந்தராஜ்,ந.(2005). தேசியத்தை நோக்கிய கல்வி, நந்தி பதிப்பகம், இலங்கை.
12. கிருஷ்ணபிள்ளை,வி.(2009). வழிகாட்டலும் ஆலோசனையும், சேமமடு பதிப்பகம், யாழ்ப்பாணம், இலங்கை.
13. கிருஷ்ணபிள்ளை,வி.(2001). வழிகாட்டலும் ஆலோசனையும், கே.எஸ்.யூ கிராப்பிக்ஷ், இலங்கை.
14. ஜெயராசா,சபா.(2011). கல்வியியல் தொடர் தொழில் வழிகாட்டல், சேமமடு பதிப்பகம், யாழ்ப்பாணம், இலங்கை.
15. ஜெயராசா,ச. உம் சந்திரசேகரன்,சோ.(2009). கல்வியலும் நிகழ்பதிவுகளும் , யாழ்ப்பாணம், இலங்கை.
16. ஜெயராசா,ச.(2007). கலைத்திட்டம், அகவிழி வெளியீடு, இலங்கை.
17. ஜெயராசா,சபா.(2006). கல்வியில் புதிய சீர்திருத்தங்கள், அகவிழி, கொழும்பு, இலங்கை.
18. ஜெயசாரா,சபா.(2002). கல்வி ஆய்வு முறையியல், யாழ்ப்பாண கல்வி ஆய்வு கழகம். இலங்கை.
19. ஜெயராசா,ச.(2001). கல்விச் சீர்மியம், போஸ்கோ வெளியீடு, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.
20. Ministry of Human Resource Development. (2000). Education for All National Action, Ministry of Education, Sri Lanka.
21. Trochim, M.K. (2002). Research Methods Knowledge Base, Cornell University. Newyork.
22. Mathewson, R. H. (1962). Guidance Policy and Practice, New York: Harper and Row Publishers.
23. கல்வி வழிகாட்டலும் ஆலோசனை கூறலும், (2010). தொகுதி (1) இலங்கை திறந்த பல்கலைக்கழகம், இலங்கை.
24. கமலநாதன்,தி.(2005). இடைநிலைப்பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை, அகவிழி வெளியீடு, இலங்கை.
25. சிவானந்தன்,ப.(2012). பாடசாலை தொழில்சார் வழிகாட்டல், ஆசிரியம் வெளியீடு, இலங்கை.
26. சின்னத்தம்பி,மா.(ஜனவரி 2006). பாடசாலைகளில் வழிகாட்டல் புதிய தேவை, அகவிழி வெளியீடு, இலங்கை.
27. பகிரதன்,ச.(2015). தொழில்வாண்மை உளவளத்துணை கற்கை நெறி, வீரகேசரி வார இதழ் இலங்கை.
28. நிரேஷ்குமார்,ம.(2007). இன்றைய காலத்தின் தேவை தொழில்சார் கல்வி, அகவிழி வெளியீடு, இலங்கை.
29. https://www.facebook.com/notes/10151201619429671/masihudeen inaamullaha